# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.203 / 2014

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 10–11–2025.

பெயர் = தங்ககார்த்தி வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) என்னிடம் காட்டப்படுவது தாவாச்சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் என்றால் சரிதான். அது நீ.ம.சா.ஆ.1,2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் உள்ள விவரத்தை என் அப்பாதான் சொன்னார் என்றால் சரிதான். என் அப்பாதான் இவ்வழக்கை தாக்கல் செய்தார் அவர் இறந்த பிறகு நாங்கள் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். பிராதில் உள்ள விவரம் எனக்குத் தெரியும். ஆதியில் தாவாச்சொத்து உள்ளிட்ட சொத்துக்கள் முத்துச்சாமி நாடாருக்கு பாத்தியப்பட்டது. தாவாச்சொத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது. பிராதில் என்ன சர்வே எண் காட்டியுள்ளார்கள் என எனக்குத் தெரியாது. விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். தென்புறம் கிழமேல் 3.1/2 அடி வடபுறம் 5.3/4 அடி தென்வடல் நீளம் 27 அடி என சாட்சி கூறுகிறார். பிராதுச்சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள நான்குமால் விவரங்களை சொல்ல முடியுமா என்றால் எனக்குத் தெரியாது. தெற்கே பவுன்ராஜ் மகன் மாடசாமி, வடக்கே தெரு, மேற்கே ராஜ்கோ வீடு, கிழக்கே பிரதிவாதிகள் வீடு என சாட்சி கூறுகிறார். பிராது சொத்து விவரத்தில் மேற்கே ராஜ்கோ வீடு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ராஜ்கோவீட்டிற்கும் தாவாச்சொத்திற்கும் இடையே மாடசாமி என்பவரின் வீடு இருந்தது என்றால் சரிதான் ஆனால் என் தம்பி பெயருக்கு மாறிவிட்டது என சாட்சி கூறுகிறார்.

(2) என் தம்பி பெயரில் மாறிவிட்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த வருடம் மாற்றினோம் என்றால் 2024ல். பிராது தாக்கல் செய்யும்போது வரைபடத்தில் வாதி வீடு என குறிப்பிட்டுள்ள இடம் மாடசாமி பெயரில் இருந்து 2024ல் என் தம்பி

பெயருக்கு மாற்றி உள்ளோம் என்றால் சரிதான். பிராதில் எங்களுடைய இடமாக வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பத்திரப்படி என் அப்பா பெயரில் இருந்தது. வருவாய் ஆவணங்களில் தவறாக மாடசாமி பெயரில் இருந்ததாக சாட்சி கூறுகிறார். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் பிராது வரைபடத்தில் காண்பித்துள்ள சர்வே எண்.109 எங்களிடம் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.109 மாடசாமிக்கு பாத்தியப்பட்டது எங்களுக்கு பாத்தியப்பட்டதாக பிராது வரைபடத்தில் பொய்யாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. மாடசாமி வீட்டிற்கும் மேற்கே இருந்த ராஜ்கோ வீட்டிற்கும் வழக்கு நடந்தது என்றால் சரிதான். அதில் ராஜ்கோவிற்கு சாதகமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின்மீது மாடசாமி மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

(3) வா.சா.ஆ.1 முத்துச்சாமியிடமிருந்து என் அப்பா தாவாச்சொத்தை கிரயம் வாங்கிய ஆவணம். அந்த ஆவணத்தின்படி தென்புறம் கிழமேல் 3.1/2 அடி வடபுறம் 5.3/4 அடி தென்வடல் நீளம் 27 அடி என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.1ல் பிராது சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.125 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 முத்துசாமிநாடாரால் என் தந்தைக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.2 பற்றியும், வா.சா.ஆ.2ல் என்ன விவரம் உள்ளது என்றும் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.3, வா.சா.ஆ–4 என்ன பத்திரம் என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 4ல் நகல்கள் தாக்கல் செய்த விவரம் அசல் உள்ளதா என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.5 அறிவிப்பை பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பு பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 தாக்கல் செய்த காலத்தில் என்ன புகைப்படம் எடுத்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் வீட்டை சுற்றி எடுக்கப்பட்டுள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வேறு இடத்தை புகைப்படம் எடுத்து தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

(4) பிரதிவாதிகளின் இடம் ஆணையர் அளக்கும்போது பத்திரப்படி கிழமேல 32 அடி என்பது மாடசாமி வீட்டிற்குள் 3.1/2 அடி மேற்காக சென்றது என்றால் சரியல்ல. தாவாச்சொத்து என்பதே எங்கள் இடத்தில் கிடையாது. வேறு இடத்தை சொல்லி தாவா வழக்கை வீண் பிரச்னை செய்வதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.125 முழுவதும் முத்துச்சாமி நாடாருக்கு பாத்தியமானது என்றால் சரிதான்.

அவருடைய வேறு சொத்தை கிரயம் வாங்கிவிட்டு தாவாச்சொத்துதான் அந்தசொத்து என வீண் விவகாரம் செய்கிறோம் என்றால் சரியல்ல. மேற்கே உள்ள மாடசாமி வீடு எங்களுக்கு பாத்தியமானது அல்ல ஆனால், பிராது வரைபடத்தில் எங்களுடைய வீடு என தவறாக காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் கிழக்கே வழக்கு தாக்கல் செய்யும்போது காலியிடமாக இருந்தது தற்போது வீடு கட்டியுள்ளார்கள். வழக்கு தாக்கல் செய்யும்போதே வீடு இருந்தது நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் முறையாக கிரயம் வாங்கி வீடுகட்டி உள்ளனர். அவர்கள் வீடு கட்டக்கூடாது என்பதற்காகவும் அவர்கள் அனுபவத்தை தடுப்பதற்காகவும் பொய்யாக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.11.10 14:57:44 +0530